அவர்கள் பணியாற்றச் செல்லட்டும், அதற்குப் பின்னாலே வேண்டுமானால் மேற்படிப்பு படித்துக் கொள்ளட்டும் என்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். இன்றைக்கு ஓரளவுக்கு நிலைமை சீர் அடைந்து இருக்கிறது. இருந்தாலும் கூட நம்முடைய மருத்துவக் கல்லூரிகளிலே இருக்கிற வசதிகளை வைத்துப் பார்க்கிற போதே, இங்கே ஏறத்தாழ ஒரு ஆண்டுக்கு 1,072 பேர்கள் இன்றைக்கு மருத்துவக் கல்லூரிகளிலே சேர்கிறார்கள். இந்த 1,072 பேர்களும் தொடர்ந்து பி.ஜி. கோர்ஸ் படிக்க வேண்டிய நிலை இருக்கிறதா என்று சொன்னால், அன்டர்-கிராஜுவேட்டுக்குத் தேவையான வசதிகளை வைத்திருக்கிறோம். ஆனால் போஸ்ட் கிராஜுவேட்டுக்குத் தேவையான வசதிகள் எல்லா மருத்துவக் கல்லூரிகளிலும் இல்லை. எவ்வளவு பேர்களைத் தேர்ந்து எடுக்க முடியுமோ அவர்களை என்ட்ரன்ஸ் எக்ஸாம் மூலம் தேர்ந்து எடுக்கிறோம். இன்னொன்று எம்.பி.பி.எஸ். படித்து விட்டு வெளியே போய் அவர்கள் பணியாற்றட்டும். 5 ஆண்டுக் காலம், 6 ஆண்டுக் காலம் அவர்கள் பயிற்சி பெறுகிறபோது இன்னும் கொஞ்சம் திறமையாக போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ் செய்ய முடியும் என்ற நிலைமை இருக்கிறது. எனவே எப்படி இருந்தாலும் கூட இதிலே மாற்றி அமைக்கிற நிலைமைகளை மெடிக்கல் கவுன்சில்தான் செய்ய வேண்டுமே தவிர அரசாங்கம் ஒன்றும் செய்ய முடியாது. பரிந்துரை அனுப்பலாம். ஆனால் மெடிக்கல் கவுன்சில்தான் இதிலே முடிவு எடுக்க வேண்டும். நம்முடைய கையிலே இல்லை. எனவே நேரிடையாக எம்.பி.பி.எஸ். முடித்த பின்னாலே பி.ஜிக்கு அவர்கள் என்ட்ரன்ஸ் எக்ஸாம் எழுதி நேரிடையாகச் சென்று படித்து வருகிறவர்களே நிறைய பேர் இருக்கிறார்கள். அதுவும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. இதிலே எந்த மாற்றம் செய்ய வேண்டும் என்று சொன்னாலும் மெடிக்கல் கவுன்சில்தான் செய்ய வேண்டும். நம்முடைய கையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 44, திரு. ஆர். டி. அரங்கநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

44—

விருத்தாசலம் அரசு மருத்துவ மனையில் பெண் நோயாளிகளுக்கென புதிய கட்டிடம் கட்டுதல்.

*22126—திரு. ஆர். டி. அரங்கநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1994 மார்ச் 19]

(அ) விருத்தாசலம் அரசு பொது மவுத்துவமனையில் பெண்களுக்கு தனியே படுக்கை வசதி கொண்ட புதிய கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். டி. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். விருத்தாசலம் அரசு மருத்துவமனை என்பது மங்களூர் தொகுதிக்கும் விருத்தாசலம் தொகுதிக்கும், இரண்டுக்கும் இடைப் பட்ட மையமான பகுதியிலே அமைந்து இருக்கிறது. அது தாலுகா மருத்துவமனையாக இருக்கிற காரணத்தால் இரண்டு தொகுதிகளில் இருக்கிற கிராமங்களில் உள்ள ஏழை எளிய மக்கள் எல்லாம் அந்தப் பகுதியிலே இருக்கிற இந்த மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெற்றுச் செல்கிறார்கள். அதிகமான மகளிர் இங்கே வந்து குவிந்துவிடுகிற காரணத்தால் உட்புற நோயாளிகளாக சேர்க்கப்பட்டவர்கள் எல்லாம் அரசு மருத்துவமனையிலே இருக்கிற வராண்டா பகுதிகளிலே வெறும் தரையிலே படுத்து மருத்துவச் சிகிச்சை பெற வேண்டிய அவல நிலை இருக்கிறது. இந்த நிலையை மாற்றி அமைத்திட இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விருத்தாசலம் அரசு மருத்துவமனைக்குத் தேவையான இடம் அங்கே இருக்கிற காரணத்தால் இன்னும் கூடுதலாக ஒரு கட்டிடத்தைக் கட்டித் தந்து, பெண்களுக்கு என மருத்துவ சிகிச்சை அளிக்கும் வகையில் கூடுதல் படுக்கை வசதிகளோடு கட்டி வழங்குவதற்கு முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது தாலுகா மருத்துவமனை. தாலுகா மருத்துவமனைகளிலே குறைந்தபட்சம் 32 படுக்கைகள் இருக்க வேண்டும் என்ற கொள்கையை அரசாங்கம் எடுத்து செயல்படுத்தி வருகிறது. இந்த மருத்துவமனையிலே 82 படுக்கைகள் இருக்கின்றன. இது தவிர, குடும்ப நலப் பிரிவின் சார்பாக 6 படுக்கைகள் பெண்களுக்கு இருக்கின்றன. இந்த 82 படுக்கைகளிலேயே தான் பெண்களுக்கும் ஆண்களுக்கும் குழந்தைகளுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற உணர்வை எங்களால் புரிந்துகொள்ள முடி-

கிறது. இருந்தாலும் நிதிப் பிரச்சினை காரணத்தால் இது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை இருக்கிறது. எனவே படிப்படியாக அது செய்யப்படும். எதிர் காலத்திலே நிதி நிலைமைக்கேற்ப அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 45, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

45—

வாணியம்பாடி தொகுதி, வெள்ளக்குட்டை கிராமத்திற்கு நகரப் பேருந்து விடுதல்.

*9597—திரு. சி. ஞானசேகரன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதி, வெள்ளக்குட்டை கிராமத்திற்கு நகரப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : வாணியம்பாடி தொகுதியிலுள்ள வெள்ளக்குட்டை கிராமத்திற்கு பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் மூன்று நகர வழித்தடப் பேருந்துகளை ஒரு நாளைக்கு மொத்தம் 16 நடைகள் இயக்கி வருகிறது.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கனவே மூன்று நகரப் பேருந்துகள் அங்கே இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று தெரிவித்தார். பல ஆண்டுகளாக அவை இயங்கிக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும் கூட, வெள்ளக்குட்டை என்பது மாண்புமிகு சி. ஞானசேகரன் பிறந்த புண்ணிய பூமி. (சிரிப்பு) அந்தக் கிராமத்திலே சுமார் 15,000 மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பக்கத்திலே இருக்கக்கூடிய பெரிய வெள்ளக்குட்டை, குறிஞ்சிக்குப்பம், நன்னேரி போன்ற கிராமங்கள் எல்லாம் (குறுக்கீடு) கேள்வி நேரத்திலே குறுக்கிடக் கூடாது. வெள்ளக்குட்டையைச் சுற்றி பெரிய வெள்ளக்குட்டை, குறிஞ்சிக் குப்பம், வெள்ளக்கல், உண்டிகோயில் போன்ற கிராமங்களில் உள்ள 50,000 மக்கள் பயன்பெறக் கூடிய அளவிலே இருக்கிறது.